பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 29 (14—12—68) சனி ★ வெளியூர்: மார்கழி 1 (15—12—68) ஞாயிறு [இதழ்: 150

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம். சுகாதாரச் செழிப்புப் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும் குடும்பத்துக்கு ஓர் -- இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

தாழ்த்தப்பட்ட மக்கட்கு கொடுமை

பீதியால் பலர் ஊரைவிட்டே வெளியேற்றம்

ம.பி. மாநில சம்பவம் -- மக்களவையில் தகவல்

புதுடில்லி, டிச. 14 —

மத்தியப் பிரதேசத்தில், மாங்கேலி பகுதியில் போலீசாரால், தாழ்த்தப்பட்ட மக்கள் அச்சுறுத்தப்படுவது குறித்து நாடாளுமன்ற மக்களவையில் எல்லாப் பிரிவினராலும் முறையிடப்பட்டது.

மினிமாதா ஆகம்தாஸ் குரு என்னும் காங்கிரசு உறுப்பினர் இதுபற்றிக் குறுகிய காலக் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்; கடந்த மாதம் பாசோபள்ளி என்னுமிடத்தில், செல்வாக்கு மிகுந்த தாழ்த்தப்பட்டோர் தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதையடுத்து தாழ்த்தப்பட்ட மக்களிடையே பீதியும் பரபரப்பும் நிலவுவதாகவும் அவர்கள், தங்கள் வீடுவாசல் உடைமைகளை விடுத்து அந்த வட்டாரத்தை விட்டே வெளியேறி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநில அரசிடமிருந்து தமக்கு வந்துள்ள தகவலின்படி, இப்படிப்பட்ட நிலை எதுவும் அங்கு இல்லை என்றும், மத்திய புலனாய்வுத் துறையினர் அந்தச் சம்பவம் குறித்து முழு அளவில் புலன் விசாரணை நடத்தியதாகவும், சம்பவம் தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் புலன் விசாரணை நடந்துவருவதாகவும் உள்துறைத் துணையமைச்சர் திரு. வி. சி. சுக்லா பதிலளித்தார்.

பல்வேறு மாநிலங்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுமை இழைக்கப்பட்டு வருவதாக திரு. சே, இலக்கப்பா கூறியதை அமைச்சர் ஒப்புக்கொண்டார். இந்தப் பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறிய நாடாளுமன்றக் குழு ஒன்று பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

"அந்தப் பகுதியில் நிலவும் பீதியைப் போக்க மத்திய அரசு ஆவன செய்யும்" என்று உறுதி மொழியளித்தார்.

"போலீசுத் துறையில் தாழ்த்தப்பட்டவர்களை அதிக அளவில் வேலைக்கு அமர்த்த வேண்டும்" என்று சில உறுப்பினர்கள் கோரினர்.

தாழ்த்தப்பட்டவர்கள் போலீசு வேலையில் சேருவது குறைந்து வருவதாகவும், எனினும், தாழ்த்தப்பட்டவர்களுக்காக போலீசுத் துறையில் ஒதுக்கப்படும் இடங்களை நிரப்ப மத்திய அரசும் மாநில அரசுகளும் முயன்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தாழ்த்தப்பட்டவர்களை மட்டுமே கொண்ட தனிப் போலீசுப் படை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் ஏற்க மறுத்தார்; 'அது நடைமுறைக்கு ஏலாதது' என்று அவர் சொன்னார்.

இந்தியத் தலைநகரில் சட்டம் ---- ஒழுங்கு !

10 மாத காலத்தில் 104 கொலை-கொள்ளைகள்

புதுடில்லி, டிச. 14 —

இவ்வாண்டு சனவரிமுதல் நாளிலிருந்து அக்டோபர் 31-ஆம் நாள்வரை இந்தியத் தலைநகரான டெல்லியில், கொலைகளும் கொள்ளைகளுமாக 104 நடந்துள்ளன.

கடந்த ஆண்டு இதே கால அளவில் 93 சம்பவங்களே நடந்துள்ளன.

—மக்களவையில் அமைச்சர் வித்யா சரண் சுக்ளா தகவல்

அரசு டாக்டர்கள் தனித்துத் தொழில் நடத்தத் தடை

உத்தரவு செல்லுமென உயர் நீதிமன்றத் தீர்ப்பு

ஐதராபாத், டிச. 14—

"அரசு அலுவலில் உள்ள டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் நடத்தக்கூடாது எனத் தடைசெய்து ஆந்திர அரசு அண்மையில் பிறப்பித்த உத்தரவு செல்லும்" என்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

"பொதுமக்களின் நலன்களைக் கருதி பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு ஆதார உரிமைகள்மீது நியாயமற்ற கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லை" என்றும் உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்சு கருதியது.

சேலம்--தர்மபுரி மாவட்டங்களில் எம். ஜி. இராமச்சந்திரன்

அண்ணா சிகிச்சை நிதிக்கு ஆயிரக்கணக்கில் பணம் வசூல்

ஒரே கூட்டத்தில் ரூ. 10,000 அளிக்கப்பட்டது

சேலம், டிச. 13—

அறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்காக டிச. 11, 12 ஆகிய நாட்களில் சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் கழகக் கிளைகள் சார்பிலும், பொது அமைப்புகளின் சார்பிலும் ஆயிரக்கணக்கில் நிதி அளிக்கப்பட்டது.

சேலத்தில் நடந்த ஒரே கூட்டத்தில் மட்டும் ரூ. 10 ஆயிரம் அளிக்கப்பட்டது.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் 11-ந் தேதியன்று கிருஷ்ணகிரி உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கழகச் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்திற்கு தர்மபுரி மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன் தலைமைவகித்தார்.

சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் வெங்கடாசலம், வட்டச் செயலாளர் சண்முகம், எம். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., அனீப்கான், கமலநாதன் எம்.பி., தர்மபுரி மத்திய வங்கித் தலைவர் கரிவேங்கடம் ஆகியோர் பேசினர்.

அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்கு பொதுமக்கள் நன்கொடை அளிக்கவேண்டிய அவசியம் பற்றியும், கழக ஆட்சியின் ஈராண்டு சாதனைகள் குறித்தும் புரட்சி நடிகர் எம் ஜி. ஆர். சிறப்புரையாற்றினார்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகவும், நகராட்சித் தேர்தல் நிதிக்காகவும் வட்டச் செயலாளர் சண்முகம் நிதி தந்தார்.

கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. இராசாராம், கமலநாதன் ஆகியோரும் அண்ணா சிகிச்சை நிதிக்காக புரட்சி நடிகரிடம் நிதி அளித்தார்கள்.

பாரூர் சுப்பிரமணியம் உட்பட பலர் புரட்சி நடிகரிடம், பரிசுச் சீட்டுகளை அளித்தனர்.

எம். ஜி. ஆர். அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியதாவது :—

"படி அரிசித் திட்டத்தை ஏழை எளிய மக்களின் நலம் கருதி கழக ஆட்சி நிறைவேற்றியே தீரும். எவர் எதிர்த்தாலும் இத்திட்டத்தைக் கைவிட்டுப் போவதில்லை.

"இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் இந்நாட்டை நடத்திச் செல்கின்ற தலைவர்களாக விளங்கக்கூடியவர்கள்; நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

வண்டலூரில் புதிய மருத்துவமனை

செங்கற்பட்டு, டிச. 14—

"வண்டலூரில் 100 படுக்கை வசதிகளைக் கொண்ட மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தத் தனியார் நிறுவனம் ஒன்று முன்வந்திருக்கிறது; அரசு இதனை ஏற்றுக்கொண்டு 20 ஏக்கர் நிலம் அளிக்கத் தயாராக இருக்கிறது."

—நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா

நாகர்கோயில் இடைத்தேர்தல்

எல்லா வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டன

நாகர்கோவில், டிச. 13—

நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்ட 8 வேட்பு மனுக்களும் இன்று பரிசீலனையாகி 'செல்லுபடியாகும்' என அறிவிக்கப்பட்டது.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் கடைசி நாள் டிச. 16-ந் தேதியாகும்; வாக்குப் பதிவு சனவரி 8-ந்தேதி நடக்கும்.

போட்டியிடும் 8 வேட்பாளர்கள் :—காமராசர் (காங்); டாக்டர் மத்தியாஸ் (சுபே); என். எம். அலி (இடது கம்யூ.); பி. விவேகானந்தா (குடியரசு); எஸ். இராகோபாலாச்சாரி, டி. வி. அங்கண்ண செட்டியார், ஜி. கிறிஸ்தபர் (சுயேச்சைகள்)

காங்கிரசு ஆட்சிக் காலத்தைவிட ரூ. 4 கோடி அதிகம்

விவசாயக்கடனுக்குக் கழக ஆட்சி ஒதுக்கியது

வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விளக்கம்

விழுப்புரம், டிச. 14—

"தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குக் கடன் தருவதற்காக இந்த ஆண்டில் ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டது; இதில் தென்னாற்காடு மாவட்டத்துக்கு மட்டும் இதுவரையில் ரூ. 1,01,03,000 தரப்பட்டிருக்கிறது.

"காங்கிரசு ஆட்சிக் காலத்தில் வேளாண்மைத் துறைக்கு ரூ. 8 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது; தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர்தான் ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், விவசாயிகளுக்குக் கடன் வழங்கிப் பேசுகையில் தெரிவித்தார்.

தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டில் விவசாயிகளுக்குக் கடன் தரும் விழா, விழுப்புரம் பயணியர் விடுதியில் நடைபெற்றது; மாவட்டக் கலெக்டர் மென்சிஸ் தலைமை தாங்கினார்; வருவாய்த்துறை அதிகாரி விசுவநாதன் வரவேற்றார்.

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"டிராக்டர்கள் வாங்குவதில் இப்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது; இதற்காக ஜெர்மனியிலிருந்து 1,000 டிராக்டர்கள் இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் நடந்திருக்கிறது.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்துக்காகத் தமிழ்நாட்டிற்கு ரூ. 90 கோடி ஒதுக்குமாறு திட்டக் குழுவைத் தமிழக அரசு கோரியிருக்கிறது."

வாக்குச் சீட்டில் புதிய முறை

தேர்தல்வரலாற்றிலேயே முதல்தடவை

நாகர்கோவில் இடைத்தேர்தலில் செயல்படுத்தப்படும்

தேர்தல் குழுவின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை — வாக்குச் சிட்டின் பின்புறத்தில் அதிகாரியின் கையெழுத்து

சென்னை, டிச. 14—

நாகர்கோவில் இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படவிருக்கும் வாக்குச் சீட்டுக்களின் பின்புறத்தில் வாக்குப் பதிவு அதிகாரிகளின் முழுக் கையொப்பமும் இருக்கும். தேர்தல்களின் வரலாற்றிலேயே இம்மாதிரி ஏற்பாடு செய்யப்படுவது இதுதான் முதல் தடவையாகும்.

இந்தியத் தேர்தல் குழுவின் ஆணையின்படி இவ்வாறு செய்யப்படுகிறது. போலி வாக்குச் சீட்டுக்களை வாக்குப் பெட்டிகளில் போடுவதற்குத் தப்பித் தவறிகூட வாய்ப்பு இல்லாதபடி பார்த்துக்கொள்வதற்காக முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வாக்குப் பெட்டிகளில் 'விஷமம்' ஏதும் நடக்காதபடி பார்த்துக்கொள்வதற்காக முன்னெச்சரிக்கையாக மற்றோர் ஏற்பாடும் செய்யப்படும்; 'சீல்' வைக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளை, எண்ணும் இடங்களுக்கு அனுப்புவதற்கு முன், கித்தான் பைகளில் போட்டு, அந்தப் பைகள் மீதும் 'சீல்' வைக்க வேண்டும் என்று தேர்தல் குழு உத்தரவிட்டிருக்கிறது.

'நாடாளுமன்ற — சட்டமன்றத் தொகுதித் தேர்தல்கள் இரண்டிலும் சம்பந்தப்பட்ட வாக்குப் பதிவு அதிகாரிகள், ஒவ்வொரு வாக்குச் சீட்டையும், வாக்காளர்களுக்குக் கொடுப்பதற்கு முன்னால் அதன் பின்புறத்தில் தங்களுடைய முழுபெயரையும் கையெழுத்திடல் வேண்டும்''

என்று தேர்தல் குழு எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

இவ்வாறு கையெழுத்துப்போடுவதால் வாக்குப் பதிவு வேலைக்கு இடையூறு ஏற்படாமலிருப்பதற்காக வாக்குப் பதிவு ஆரம்பமாவதற்குமுன்பே சுமார் 100 வாக்குச் சீட்டுகளில் முன்கூட்டியே கையொப்பமிட்டு வைத்துக் கொள்ளுமாறும் யோசனை கூறப்பட்டிருக்கிறது; மற்ற வாக்குச் சீட்டுக்களில் அவ்வப்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப கையொப்பம் செய்துகொள்ளலாம்.

இந்த முன்னெச்சரிக்கையான முறையையும்மீறி, வாக்குப் பதிவின் இறுதியில், கையொப்பமிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்படாமல் கையில் தங்கிவிட்டிருக்குமானால் அவற்றைத் தனியாக ஒரு உரையில் போட்டு வைக்கவேண்டும். கையொப்பமிடாத வாக்குச் சீட்டுகளுக்கும் — இவற்றுக்குமிடையில் வேறுபாடு தெரிவதற்காக இவ்வாறு தனியாகப் போட்டு வைக்கவேண்டும்.

55 நாட்களுக்கு ரூ. 13,860

இந்திய அதிகாரி பெற்ற படித் தொகை!

புதுடில்லி, டிச. 14—

வெளிநாட்டு ஓட்டல்களில் தங்கியிருக்கும் காலத்தில் இந்திய அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய படித் தொகைகளைப் பட்டுவாடா செய்தற்குரிய விதிமுறைகளைத் தயாரித்து விரைவில் முடிக்குமாறு, நாடாளுமன்ற பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இக்குழுவின் 36-வது அறிக்கை, நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று அளிக்கப்பட்டது.

மாதம் ரூ. 800 மட்டுமே ஊதியம் பெற்றுக்கொண்டிருந்த ஓர் அதிகாரி 55-நாள் வெளிநாட்டு ஓட்டலில் தங்கியதற்காக ரூ. 13,860 கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதுபற்றி முந்திய நாடாளுமன்ற கணக்குக் குழு அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அணுசக்தித் துறை ஊழியர்கட்காகக் குடியிருப்பு விடுகள் கட்டுவதற்காக 1958-ஆம் ஆண்டே பம்பாயில் இடம் வழங்கப்பட்டும், கட்டுமான வேலை இன்னும் தாமதப் படுத்தப்படுவது குறித்தும், கணக்குக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சி. சுப்பிரமணியம் காலத்து உருக்கு பேர ஊழல்!

5 அதிகாரிகள் மீது இப்போது குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 13 —

"அமின் சந்த் பியாரிலால் கம்பெனியுடன் உருக்கு பேர ஊழல் சம்பந்தமாக அரசாங்கக் குழு அறிக்கையின் அடிப்படையில் 5 அதிகாரிகளுக்குக் குற்றப் பத்திரிகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன"

என்று உருக்குத் துறை அமைச்சர் திரு. பி.சி. சேத்தி நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார். மேலும் 4 அதிகாரிகளுக்கு குற்றப் பத்திரிகைகள் கொடுக்கப்படும்" என்றும் அவர் சொன்னார்.

திரு. சி. சுப்பிரமணியம் உருக்கு அமைச்சராக இருந்த காலத்தில் இந்த ஊழல் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைத் துறைமுக வரலாற்றில் புதுமை

இதுவரை கண்டிராத மாபெரும் இயந்திரம் இறக்குமதி

மணலி உரத் தொழிற்சாலைக்காக வந்திறங்கியது

சென்னை, டிச. 14—

240 டன் எடையுள்ள ஒரு மாபெரும் இயந்திரச் சாதனம், சென்னைத் துறைமுகத்தின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இறக்கப்பட்டிருக்கிறது.

மணலி உர ஆலைக்காக வரவழைக்கப்பட்டுள்ள 'அமோனியா கன்வர்டர்' இயந்திரமே இது!

இந்த இயந்திரச் சாதனத்தின் நீளம் 80 அடி; விட்டம் 8 அடி. ஜப்பானில் கனமான சரக்குகளை ஏற்றிவரும் மிகப் பெரிய கப்பல்களில் ஒன்றான 'நச்சிமாரு' என்ற கப்பலில் இது வந்து சேர்ந்தது.

இந்த இயந்திரச் சாதனம், மூன்று மரத்தாங்கிகளின்மீது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரச் சாதனத்தை உருக்குக் கம்பிகளால் கட்டுவதற்கு 3 மணி நேரம் பிடித்தது. அப்படிக் கட்டியபிறகு இந்தச் சாதனத்தை 12 அடி உயரத்துக்குத் தூக்கி, கரையில் தயாராக வைக்கப்பட்டிருந்த ஓர் உருளைச் சாதனத்தின்மீது இறக்கினார்கள்.

தண்டவாளத்தின்மீது இந்தச் சாதனத்தைச் சரிவரப் பதிய வைப்பதற்கு சுமார் ஒரு மணி நேரம் பிடித்தது.

உர ஆலைக்குத் தேவைப்படும் மிகப் பெரிய இந்த இயந்திரச் சாதனம் வந்துவிட்டதால், மணலியில் 1970-ம் ஆண்டு மத்தியில் திட்டமிட்டபடி உர உற்பத்தி ஆரம்பமாகிவிடுமெனத் தெரிகிறது.

அந்த இயந்திரத்தைச் சாலை வழியாக மணலிக்குக் கொண்டு போவதற்காக வழியிலுள்ள பாலங்களையும், மதகுகளையும் பலப்படுத்தி வருகிறார்கள். மணலிக்கு அருகில் பக்கிங்காம் கால்வாய்மீதுள்ள பாலம் இன்னும் கட்டி முடிந்தாகவில்லை. 1969 ஏப்ரலில் இது முடிந்துவிடலாம்; அதுவரையில் இந்தச் சாதனம் துறைமுகத்தில்தான் இருந்து வரவேண்டும்.

சாதாரணமாக, சரக்கை எடுத்துப் போகாமல் துறைமுகத்திலேயே வைத்திருந்தால் அதற்காகத் 'தண்ட கட்டணம்' செலுத்த வேண்டும்; ஆனால் இந்த இயந்திரச் சாதனம் தொடர்பாக விலக்கு அளிக்கத் துறைமுக அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சலுகைக் கட்டணத்தில் வாடகை மட்டுந்தான் வசூலிக்கப்படும். இந்த இயந்திரச் சாதனத்தைச் சுற்றி வேலி அமைக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பில் காங்கிரசாரின் அக்கறையின்மை

காங்கிரசுக்காரரே வெளியிடும் உண்மை

ஜெயப்பூர், டிச. 14—

காங்கிரசு ஆளும் மாநிலங்களான இராஜஸ்தானிலும், குசராத்திலும், ஆந்திரத்திலும் 'தீண்டாமை' எனும் கொடுமை முழு அளவில் இருந்துவருவதாக மத்திய அரசு அமைத்த தீண்டாமை (ஆய்வு)க் குழுவின் தலைவர் இளைய பெருமாள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவர் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும், 'மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களிலும் தீண்டாமை இன்னும் அப்படியே இருந்து வருகிறது' என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

"பின்தங்கியோர் நிலைமையில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தபோதிலும்கூட, அமைதியின்மை நிலவி வருகிறது; ஏனெனில், பின்தங்கியோர் இப்போது தங்கள் உரிமைகளை நிலைநாட்டி வருவது தான் காரணம்.

சாதிகளின் காட்சிகூடமாக ஒரு சமயம் விளங்கிய கேரளம்தான் தீண்டாமையை ஒழிக்க முதலாவது மாநிலமாக விளங்குகிறது.

"தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக இந்தியாவின் எந்த மாநிலத்திலும் தனிப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படாதது வருந்தத்தக்கது. வேலை வாய்ப்புகளில் மட்டும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவையும் நிறைவு செய்யப்படவில்லை."

பாரத் சேவக் சமாஜம் தரவேண்டிய பாக்கி

இதுவரை வசூலிக்கப்படவில்லை

புதுடில்லி, டிச. 13 —

டெல்லியிலுள்ள பாரத் சேவக் சமாஜத் தலைமை அலுவலகமும், டெல்லிக் கிளை அலுவலகமும், நவ 30 அன்றுவரையுள்ள கணக்குப்படி மத்திய அரசுக்கு ரூ. 3,62,756 பாக்கி தர வேண்டியிருக்கிறது.

மத்திய அரசாங்க வீட்டு வசதித் துறை அமைச்சரால் ஒதுக்கித் தரப்பட்ட அலுவலகக் கட்டிடங்களுக்காகத் தரப்பட வேண்டிய வாடகைப் பாக்கியே இத்தொகை!

மக்களவையில் கேள்வி நேரத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

"பாக்கியை வசூலிக்க வீட்டு வசதித் துறை அமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றும் கூறப்பட்டது.

(பாரத் சேவக் சமாஜம் பழைய மத்திய அமைச்சர் குல்ஜாரிலால் நந்தாவின் 'செல்லப் பிள்ளை' என்பது தெரிந்ததே!")

சன்னல் திரையாக தேசியக் கொடி

செய்தியை மறுக்கிறார் அமைச்சர்

புதுடில்லி, டிச. 14—

"இந்தியத் தேசியக் கொடிகள் இலண்டனில் உள்ள சில வீடுகளில் சன்னல் திரையாகப் பயன்படுத்தப்பட்டது உண்மையா?"

என்று நாடாளுமன்ற மேலவையில், ஜே. எஸ். திலக் என்பவர் கேட்டார்.

இதற்கு, வெளிநாட்டுத் துறைத் துணையமைச்சர் திரு. சுரேந்திர பால் சிங் பதிலளிக்கையில், 'கிடைத்துள்ள தகவலின்படி இது உண்மையாக இருக்கமுடியாது' என்றார்.

"இதுபற்றி இலண்டனிலுள்ள நமது தூதுவரிடம் கேட்கப்பட்டு முறையாக விசாரிக்கப்பட்டிருக்கிறது" என்று அமைச்சர் மேலும் கூறினார்.

வட மொழி வகுப்புக்கு நிதி வசதி இல்லை

மதுரைப் பல்கலைக் கழகம் அறிவிப்பு

மதுரை, டிச. 13—

"மதுரைப் பல்கலைக் கழகத்தில் வட மொழி 'டிப்ளமா' பயிற்சி வகுப்பு நடத்தத் தேவையான நிதி வசதி இல்லை"

என்று துணைவேந்தர், பல்கலைக் கழகக் கல்விக் குழுவில் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"மதுரைப் பல்கலைக் கழகத்தில் வட மொழி 'டிப்ளமா' பயிற்சி வகுப்பு நடத்தப் பல்கலைக் கழக மானியக் குழு நிதி உதவி ஏதும் தரவில்லை.

இராமேசுவரம் கோயில் தேவஸ்தானம் இந்நோக்கத்திற்காக உறுதியளித்தபடி, இன்னும் உதவி வந்து சேரவில்லை."

சிந்துவெளி நாகரிக ஆய்வுக்குப் புதிய சான்றுகள்

கற்கால மனிதனை அறிய உதவும் கற்கருவிகள் கண்டுபிடிப்பு

சண்டிகார், டிச. 13—

பஞ்சாபில் கங்ரா மாவட்டத்தில் கூலூர் என்னும் பகுதியில் பஞ்சாப் பல்கலைக் கழகத்தினர் அண்மையில் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சியில் ஒரு நூறு தட்டைக் கற்கருவிகளும், புதிய கற்காலக் கருவிகள் சிலவும் கிடைத்துள்ளன.

சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மை குறித்து மேலும் அறிந்துகொள்ள உதவும் புதிய சான்றுகள் இவை மூலம் கிடைத்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

மொகஞ்சதாரோவில் நிலவிய தொடர்புகளை விளக்கும் புதிய கற்காலப் பண்பாட்டின் தடங்கள் சிலவும் தெரியவந்துள்ளன.

தட்டைக் கருவிகளின் கண்டுபிடிப்பானது, இடைக் கற்கால பண்பாட்டின் அதாவது 5-இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய மனிதனைக் குறித்து அறிய உதவுவனவாக இருக்கின்றன.

சிந்துவெளி நாகரிகம் பண்டைத் திராவிட நாகரிகமேயாகும்.

பிஜோவுடன் பேச்சு இல்லை

இந்திரா காந்தி அறிவிப்பு

"கலக நாகர்களின் தலைவர் பிஜோவுடன் இந்திய அரசு எவ்விதப் பேச்சுவார்த்தையும் நடத்தாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நாடாளுமன்ற மேலவையில், ஏ. டி. மணியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் உறுதியாகத் தெரிவித்தார்.

சாதியை ஒழிக்க

அண்ணு ஆட்சியின் சாதனை!

கலப்பு மணத் தம்பதிகளுக்குக் கைகொடுக்கும் திட்டம்

பரிசளிப்பு விழாவில் அமைச்சர் மு. கருணாநிதி பெருமிதம்

மன்னார்குடி, டிச. 12—

தஞ்சை மாவட்டத்தில் கலப்பு மணம் புரிந்துகொண்ட தம்பதிகளுக்கு, பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி தலைமையில் தங்கப் பதக்கம் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

அமைச்சர் கருணாநிதி, தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களைப் பரிசளித்து உரையாற்றுகையில் கூறியதாவது :—

"சமூகத்தினராலும் உற்ருர் உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்ட கலப்புத் திருமணத் தம்பதிகளை அண்ணுவின் அரசு காப்பாற்றுகிறது -- பாராட்டுகிறது -- அரவணைக்கிறது! அதன் அடையாளச் சின்னம்தான் இந்தத் தங்கப் பதக்கப் பரிசளிப்பு விழா!

பெருமைமிகு இவ்விழா உங்களால் வரவேற்கப்படுகிறது -- பாராட்டப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதுதான் நீங்கள் பெருந்திரளாக இங்கு கூடியிருப்பது!

இவ்விழாவில் தமிழக அரசும் பங்கேற்கிறது -- அங்கம் வகிக்கிறது என்பது இவ்விழாவிற்கு மேலும் ஒளியூட்டுவதாகும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற செந்நாப் போதன் வள்ளுவர் வாக்கினைக் கழக அரசு இதுபோன்ற பணிகளின் மூலம் செயல்படுத்தி வருகிறது!

எவர் தீண்டாமை ஒழிப்பிற்காக -- சாதிபேதக் கொடுமை ஒழிவதற்காகக் காலமெல்லாம் கடும் பணியாற்றினரோ -- அந்தக் காந்தியாரின் பிறந்த நாளில் காந்தியாரின் உண்மைச் சீடரான செகசீவன் ராம் தலைமையில் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குப் பரிசளிப்பு விழா துவங்கியது! துவக்கமே உன்னதமாய் இருக்கிறது என்பதை உலகுக்கு எடுத்தோதியது அந்த விழா!

கலப்புத் திருமணம் செய்து கொண்டபோது இந்தக் கலப்புத் திருமணத் தம்பதிகளை, இந்தச் சமுதாயத்தின் பழமைவாதிகள் மத யானைபோல் துரத்தினர்கள்!

அன்று மத யானையால் துரத்தப்பட்டோர் இன்று 'மன்னை யானை' முன் செல்ல ஊர்வலமாக வந்தார்கள்!

தமிழக அரசு இந்தத் தம்பதிகளுக்கு அளித்த தங்கப் பதக்கம், தம்பதிகளிடத்திலேயே 'தங்கும் பதக்கமாக' இருக்கும் வகையில் அவர்களது வாழ்வு வளம் பல பெற்றிட வாழ்த்துகிறேன்."

இலஞ்ச ஊழலில்

ஈடுபட்ட

அரசு ஊழியர்கள்

காலாண்டுக் காலத்தில்

தண்டிக்கப்பட்டோர் விவரம்

சென்னை, டிச. 14—

இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் பேரில் 30—9—68-ல் முடிந்த காலாண்டில், தண்டிக்கப்பட்ட அரசு அலுவலர்கள் விவரம் பின் வருமாறு:—

ஒரு மருத்துவ அதிகாரி, ஒரு மாவட்ட சுகாதார அதிகாரி, ஒரு ஊராட்சி ஒன்றிய எஞ்சினீயர், மூன்று சுகாதார இன்ஸ்பெக்டர்கள், ஒரு சிறுபாசன ஓவர்சியர், ஒரு தாசில்தார், ஒரு போலீசு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு போலீசு கான்ஸ்டபிள் ஆகியோர் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.

ஒரு புரபேஷனரி சப்-இன்ஸ்பெக்டர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஒரு அரசாங்க உதவி நிறுவனங்களுக்கான மாவட்ட இன்ஸ்பெக்டர், ஒரு ரேஞ்சு அதிகாரி, ஒரு எழுத்தர் ஆகியோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

ஒரு சிறுபாசன ஓவர்சியர், ஒரு தொழில் வாணிக இயக்குநர் அலுவலக சூப்பிரண்டெண்டு, ஒரு வனத் துறை அதிகாரி ஆகியோர் சட்டாய ஓய்வு பெறுமாறு செய்யப்பட்டனர்.

ஒரு இணை வட்ட சப்ளை அதிகாரியின் வேலை உயர்வு ஓராண்டுக்கு நிறுத்தப்பட்டது.

ஒரு சூபர்வைசர் கண்டிக்கப்பட்டார்.

ஒரு நிர்வாக எஞ்சினீயர், ஆறு உதவி எஞ்சினீயர்கள் ஆகியோருக்கு ஓர் ஆண்டிலிருந்து ஏழு ஆண்டுகள்வரை பல்வேறு கால அளவுகளுக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒரு தாசில்தார், இரண்டு கர்ணங்கள் ஆகியோர் ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

இந்தக் காலாண்டில், மூன்று வழக்குகளில் (ஒரு தனி ரெவினியூ இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் கான்ஸ்டபிள், துறைத் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த ஓர் உதவியாளர்) கீழ்க் கோர்ட் விதித்த தண்டனையை உயர் நீதி மன்றம் உறுதி செய்தது.

ஆழ்கடல் ஆய்வு

ஜெர்மானியரின் சாதனை

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு, ஆழ்கடல் ஆராய்ச்சியில் பெரிதும் முன்னேறியுள்ளது. உதாரணமாக, ஜெர்மனியில் லூபெக் நகரில் உள்ள ஓர் நிறுவனம், ஆழ்கடலில் மூழ்கி ஆராய்ச்சி நடத்த புதுமையான சாதனத்தை உருவாககியுள்ளது; சடலுக்குள் 656 அடி ஆழத்தில், பிராணவாயு சாதனத்துடன் மட்டும் குதிக்க இதனல் வசதிப்படுகிறது.

நீருக்குள் இருக்கும்போது, கடல் நீரின் அழுத்தம் அதிகமாக இருக்கும்; இதற்கு மனிதன் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கு ஏற்புடைய சோதனை அறை ஒன்றை இந்த நிறுவனத்தினர் உருவாக்கியுள்ளனர். இந்த அறையில் ஆய்வாளர்கள் இருந்துகொண்டால், அப்படியே கடலுக்குள் இறங்கி விடலாம்.

கடலில் 200 மீட்டர் ஆழத்தில் மனிதனின் இரத்தத்தில் நைட்ரஜன் குறைந்துவிடுகிறது; இதனல் பெரிதும் தீங்கு ஏற்படுகிறது. தற்போது கடலுக்குள் செல்லும்போது மனிதன் சுமந்து செல்லும் சாதனத்தில் பிராண வாயுவும் இருக்கும்.

அடுத்து வசந்தகாலத்தில் ஆழ்கடலிலேயே ஒரு சோதனைக் கூடத்தை இறக்கி ஆராய்ச்சிகள் மேற்கொள்ள ஜெர்மன் முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இந்த சோதனைக்கூடத்தில் 4 விஞ்ஞானிகள் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் நடத்தலாம.

தமிழக அரசின் செய்திப் படம்

எட்டாவது தொகுதி வெளியீடு

சென்னை, டிச. 14—

தமிழக அரசின் திரைப்படத் தொகுப்பு எட்டாவது தொகுதியில் அதில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

சென்னையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் கொண்டாடிய திருவள்ளுவர் திருநாள் விழா; சென்னை நகரில் தமிழக அரசு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தியுள்ள புதிய குடியிருப்புகள் திறப்புவிழா; சென்னையில் ஆந்திர கேசரி டி. பிரகாசம் சிலை திறப்பு விழா; பள்ளி அனைதைக் குழந்தைகளுக்கு தமிழக ஆளுநர் அளித்த தேநீர் விருந்து; சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் ஓவியப் போட்டி; சென்னை மிருகக் காட்சி சாலையில் சிறுவர் இரயில் வண்டி விடும் திட்டத் தொடக்கவிழா; சென்னை நகரிலுள்ள பெண்கள் கூட்டுறவுச் சங்க ஆண்டுவிழா; அமைச்சர் சத்தியவாணிமுத்து வெளிநாட்டுப் பயணம்.

இந்தப் படம் சென்னை நகரின் முக்கியமான தமிழ்க் கொட்டகைகளிலும், மதுரை, சேலம், கோவை திருச்சி ஆகிய நகரங்களிலும் காண்பிக்கப்படுகின்றன.

செவ்வாய்க் கோள் ஆராய்ச்சி!

மிக அருகில் சென்று படமெடுக்க முயற்சி

இரண்டு விண் கோள்கள் அனுப்ப அமெரிக்கா திட்டம்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க விஞ்ஞானிகள் செவ்வாய்க் கோளைக் கடந்து செல்லும்படிச் செயற்கைக் கோள் ஒன்றை விண்வெளியில் ஏவினர்; அக்கோள், குறித்தபடி செவ்வாயைச் கடந்து சென்று மிக அருகில் அக்கோளைப் படம் எடுத்து அனுப்பியது. இவ்வாறு செவ்வாய்க் கோள் படம் எடுக்கப்பெற்றது அதுவே முதல் தடவையாகும்.

1969 துவக்கத்தில் இன்னும் இரண்டு கோள்கள் செவ்வாயைக் கடந்து செல்லும்படி அனுப்பும் திட்டம் இப்பொழுது தயாராகி வருகிறது.

செவ்வாயை நோக்கி 1965-ல் நடந்த இந்தப் பயணம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாகும். அந்தச் செயற்கைக் கோள், செவ்வாயிலிருந்து 6,118 மைலுக்கப்பால் இருந்து 21 புகைப் படங்கள் எடுத்தது. இதுதான் செயற்கைக் கோள் இருந்த மிக நெருங்கிய தூரம். செவ்வாயின் மேற்பகுதியும் சந்திரனின் மேற்பகுதியைப்போல் மேடு -- பள்ளங்கள் -- குழிகள் நிரம்பியது என இப்படங்கள் காட்டின.

இனி அனுப்பவிருக்கும் இரண்டு விண் கோள்களிலும் இரண்டு காமிராக்கள் அமைக்கப்பட்டிருக்கும்; மிக நுண் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள காமிராக்கள் இவை; இரண்டும், செவ்வாய்க் கோளிலிருந்து 2,000 மைலுக்குள் வரும்; அவை ஆக மொத்தம் குறைந்தது 66 டெலிவிஷன் படங்கள் எடுக்கும்.

'நாசா' என்ற அமெரிக்கத் தேசிய விண்வெளி நிலையம் அடுத்த பிப்ரவரி மத்திக்கும் -- ஏப்ரல் மத்திக்குமிடையே இந்த இரண்டு மாரினர் விண்வெளிக் கப்பல்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. அவை, சூலை இறுதிக்கும் -- ஆகஸ்டு மத்திக்குமிடையே செவ்வாய் அருகில் செல்லும். செவ்வாய்க் கோளுக்கு மிக அருகில் அவை இருக்கும்போது, பூமியிலிருந்து ஏறத்தாழ 6 கோடி 20 இலட்சம் மைலுக்கப்பால் இருக்கும்.

காமிராக்கள் தவிர ஒவ்வொரு கோளிலும் விஞ்ஞானக் கருவிகள் இருக்கும்; செவ்வாய்க் கோளின் மேல்பரப்பு, அதன் சூழ்நிலை ஆகியவற்றைப் பற்றி இக்கருவிகள் தகவல் தரும்.

நடக்க இருப்பவை

15--12--68

சென்னை 1.5-வது வட்டம்

கலைஞர் பொதுப்பணி மன்றச் சார்பில் அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்களுக்கு வரவேற்பு-- வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பு; மாலை 7-மணிக்கு புதூர்-- அசோக நகர் அரசினர் உயர் நிலைப் பள்ளிக்கு அருகில்; தலைவர் : டி. ஆர். செயராமன்; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி., சைதை சம்பந்தம், செல்வி ஏ. பி. மனேன்மணி, கோ. அய்யாவு எம்.சி., செல்வி எம். இந்திரா, ம. நா. செயச்சந்திரன், மற்றும் பலர்.

பண்ணுருட்டி

நகர அண்ணு அறிவு வளர்ச்சி மன்றத் துவக்க விழா --- 'தமிழ் நாடு' பெயர் மாற்ற சிறப்பு விழா; மாலை 6-30 மணிக்கு கும்பகோணம் ரோடு அண்ணு திடலில்; தலைவர் : ஆர். தண்டபாணி; பேசுவோர் : ப. உ. சண்முகம் எம்.எல்.சி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., வி. கிருட்டிணமூர்த்தி எம்.பி., எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, ஆர். இலட்சுமிகாந்தன், ஏ. மணி, கே. தட்சிணமூர்த்தி, மற்றும் பலர்.

சிவகாசி

சவுந்திரபாண்டியனர் நினைவு மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு ஊரணி திடலில்; தலைவர் : எம். என். பெருமாள்; பேசுவோர் : கேரளசுந்தரம், ஏ. துரைக்கண்ணன், மற்றும் பலர்.

அலிவலம்

தி. மு. க., எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : பி. எச். சுல்தான்; பேசுவோர் : சு. தென்கோவன், எஸ். தியாகராசன், பொ. துரைஅரசன், அ. அம்பலவாணன், அ. பெ. பால்ராசு, வே. இராசன், ச. இராதா, டாக்டர் டி. கே. தண்டபாணி, மற்றும் பலர்.

சென்னை 113-வது வட்டம்

அழகிரி நினைவு மன்ற 9-ம் ஆண்டுவிழா --- 'தமிழ் நாடு' பெயர் மாற்ற மகிழ்ச்சி விழா -- வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்பு; மாலை 7-மணிக்கு அம்மன் கோவில் திடலில் (வடபழனி ஆண்டவர் கோவில் தெரு); தலைவர் : ந. அரங்கனதன்; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், மேயர் வேலூர் நாராயணன், காஞ்சி மணிமொழியார், சோ. கி. மூர்த்தி எம்.சி., இரா. ஆனந்தன், மா. பெருமாள், ந. தாமோதரன், மற்றும் பலர்.

நாமக்கல்

நகர கலைஞர் கருணநிதி மன்றம் -- பழனிவேலன் படிப்பகம்

த. மி. தொ. மு. சங்க ஆண்டு விழா

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க எண்ணூர் அனல் மின்திட்டப் பகுதிக் கிளையின் ஆண்டுவிழா, 15-12-68 காலை 9-30 மணிக்கு நடைபெறும்; தொழிலாளர் நல அமைச்சர் திரு. செ. மாதவன், காட்டூர் கோபால், எஸ். இராமச்சந்திரன், ந. வீராசாமி எம்.எல்.ஏ., ச. வெ. அங்கப்பன், மா. மோகனதாசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மின்சார பல்பு தொழிற்சாலை

தமிழகத்தில் நிறுவ அரசு முயற்சி

மதுரை, டிச. 14—

"மாநில அரசின் பல்வேறு துறையினருக்கும், ஊராட்சிகளுக்கும் தேவைப்படுகின்ற மின்சார பல்புகளை உற்பத்தி செய்து தருவதற்கு ஒரு தொழிற்சாலையைத் தனியார் துறையிலோ போதுத் துறையிலோ துவக்குவதென்று தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது"

என்று தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இது குறித்து விரிவான திட்டத்தை வகுத்திடுமாறு தமிழக மின் வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தனிப்பட்ட முறையில் சட்டத் தேர்வு எழுத அனுமதி

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் கருத்துரை

புதுடில்லி, டிச. 14

"மாணவர்கள் தனிப்பட்ட முறையில் சட்டத் தேர்வு எழுத அனுமதிககப்பட வேண்டும்; ஏனெனில், இவ்வாறு செய்வது ஏழை மாணவர்களுக்கு உதவுவதோடு, அரசாங்கம் மேலும் கல்லூரிகளைத் திறக்கும் செலவையும் மிச்சப்படுத்தும்"

என்று நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் ஜி ஏ. அப்பன் கூறினர்.

வழக்கறிஞர்கள் திருத்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு அவர் பேசினர்.

பெங்களூரில் பாரதி விழா

பெங்களூர் தமிழ் எழுத்தாளர் மன்றச் சார்பில் 15—12—68 காலை 9 மணிக்கு அஜந்தா தியேட்டர் அருகில் உள்ள ஒடுக்கத்தூர் மடத்தில் பாரதி விழா நடைபெறும்; திரு. ஆ. மா. தர்மலிங்கம் தலைமையில் புலவர் பொன்னிவளவன் சிறப்புரையாற்றுவார்; திரு. தங்கவயல் எழிலன் தலைமையில் பாரதி கவியரங்கம் நடைபெறும்; கவிஞர்கள் அறுவர் பங்கேற்பர்.

ஆகியவை சார்பில் மாலை 6-30 மணிக்கு திரு. வி. க. பாறையில்; தலைவர் : இரா. வையாபுரி; வரவேற்பு : ந. சந்திரசேகரன்; பேசுவோர் : கோவை மு. இராமநாதன், ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ., அன்புக்கரசு, மு. பழனிவேலன், பி. தியாகராசன், நா. செம்பு, ஆர். எம். பழனிமுத்து, சீனிவாசன், ஏ. மாரியப்பன்.

16--12--68

மின்பாறை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : இரா. கோவிந்தசாமி; பேசுவோர் : சி. தமிழரசி, இராமசாமி எப்.எல்.ஏ., மற்றும் பலர்.

ஆந்திர மாநில தி. மு. க. தேர்தல்

ஆணையாளர்: புலவர் மி. ச. நடேசன்

15—12—68 ஞாயிறு காலை 10-மணிக்கு ஆந்திர மாநிலம் புத்தூர் வைசியாள் சத்திரத்தில் நடைபெறும் ஆந்திர மாநில தி.மு.க. அமைப்புத் தேர்தல், தலைமைக் கழக ஆணையாளர் புலவர் மி. ச. நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.

அறிஞர் அண்ணு சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணு சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணுநிதி அவர்கள் விடுத்த வேண்டு கோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

		ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி		30,160 03
தஞ்சையில் 11—12—68 அன்று பொருளாளர் மு. கருணுநிதி அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தஞ்சை மாவட்ட அமைப்புகளின் சார்பிலும் தனிப்பட்ட தோழர்களாலும் அளிக்கப்பட்ட தொகை (விவரம் பின்னுல்)		25,979.05
திருச்சியில் 12—12—68 அன்று பொருளாளர் மு. கருணுநிதி அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் திருச்சி மாவட்ட கழக அமைப்புகளாலும், தனிப்பட்ட தோழர்களாலும் அளிக்கப்பட்ட தொகை (விவரம் பின்னுல்)		26,725.51
காரைக்கால் நகரில் 13—12—68 அன்று கழகப் பொருளாளர் கலந்துகொண்ட கூட்டத்தில் :—		
திருநள்ளாறு திருமலைராயன்பட்டினம் கிளைகள்	... 37.12	
காரைக்கால் வழக்கறிஞர் இராமசாமி	...101.00	
காரைக்கால் பொதுக்கூட்டத்தில் கே. தண்டாயுதபாணி மற்றும் தோழர்கள்	... 40.00	178.12
இசைமணி சீர்காழி கோவிந்தராசன்		100.00
சென்னை-7. ஏ. பி. சனுர்த்தனம் எம்.எல்.சி.		100.00
காஞ்சிபுரம் முன்னுள் நகராட்சி உறுப்பினர் வாத்தியார் எஸ். முருகேச முதலியார்		51.00
செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தின் சார்பாக முதல் தவணையாக மாவட்டப் பொருளாளர் க. சிவானந்தம் மூலம்		116.00
ஆக மொத்தம்		83,409.71

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :—
மு. கருணுநிதி பொருளாளர்,
தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

அடுத்த வாரத்தில் பர்மா அரிசி

ரேஷன் கடைகளில் கிடைக்கும்

சென்னை, டிச. 14—
பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரம் டன் நல்ல ரக அரிசி அடுத்த வாரம் ரேஷன் கார்டுதாரர்களுக்குக் கிடைக்கும்.

தற்போது சில டி. யூ. சி. எஸ். கிளைகள் பர்மா அரிசியை வழங்கி வருகின்றன.

'ஏடிடி-27' உயர் ரக அரிசி (கிலோ 92 காசு) தற்போது ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது; அதில் ஈரச் சத்து அதிகமாக உள்ளது என்றும், மூட்டைகளில் கட்டி கட்டியாகப் போய் விடுகின்றன என்றும் அதிகார வட்டாரங்களை விசாரித்ததில் தெரிகிறது.

ஆவடியிலுள்ள அரசாங்கக் கிடங்குகளில் அரிசியை உலரச் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு வார காலத்தில் அரிசி சீராகி சப்ளைக்கு ஏற்றதாகிவிடும்.

ஈரம் காரணமாக எடை குறைவதாக பெரும்பாலான ரேஷன் கடைக்காரர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மதுக் கடைகளுக்கு விடுமுறை

காரைக்கால், டிச. 14—
புதுவை மாநிலத்தில் நகராட்சித் தேர்தல்கள் நடைபெறவிருப்பதையொட்டி, எல்லா மதுக் கடைகளும் டிச. 15-ந் தேதியும் 16-ந் தேதியும் மூடப்பட்டிருக்க வேண்டும் என்று மாநில அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது வாக்குப் பதிவு திங்களன்று நடைபெறவிருக்கிறது.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில் வார்னிஷ் சாவு !

ஊப்ளி, டிச. 14—
இங்கு வார்னிஷ் அருந்தியதால் 11-பேர் மாண்டனர்; இவர்களில் 6 பேர் பெண்கள்.

6 பேர், தங்களுடைய இல்லங்களிலேயே இறந்தனர்; மற்றவர்கள், மருத்துவமனையில் இறந்தனர்.

ஐதராபாத்தில் திருக்குறள் வகுப்பு

கி.ஆ.பெ. விசுவநாதம் துவக்கிவைக்கிருர்

திருச்சி, டிச. 13—
திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் இன்று இரவு சென்னை வழியாக ஐதராபாத்துச்குப் புறப்பட்டார்; 15-ந் தேதி செகந்திராபாத் தமிழ் மன்றத்தில் திருக்குறள் வகுப்புத் தொடங்கிவைத்து சொற்பொழிவு நிகழ்த்துவார்; 16-ந் தேதி காலை ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் தமிழ் மன்றத்தைத் தொடக்கிவைத்துவிட்டு அன்று இரவே புறப்பட்டு திருச்சி வந்து சேருவார்.

ஆம்பூர் தி.மா.மு.க. அமைப்புக் கூட்டம்

ஆம்பூர் நகர தி.மா.மு.க. அமைப்புக் கூட்டம், 15—12—68 மாலை 4 மணிக்கு, ஆம்பூர் நகர தி.மு.க. அலுவலகத்தில், திரு எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்: ஆர்வமுள்ள உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

காங்கிரசு அமைச்சரின் ஞானேதயம்!

நாகபுரி, டிச. 14—
"நாட்டில் கட்சித் தாவல்களுக்கு இடமில்லாத ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"கொள்கைகள் காரணமாகக் கட்சி மாறலாம்; ஆனுல், பதவிக்காகக் கட்சி மாறுவதென்பதை அனுமதிக்கக்கூடாது. நாட்டில் இப்போது கட்சி மாறுவது பதவிக்கே தவிர, கொள்கைக்காக அல்ல."

--அமைச்சர் சவான்

சேலம்---தர்மபுரி மாவட்டங்களில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் சிற்பிகள்; ஆகவே, அவர்களுடைய இளம் மனதில் சாதி மத வேறுபாடுகளையோ, ஏழை--பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வுகளையோ பதியவிடாமல் நல்ல குணங்களை வளர்க்க வேண்டும்."

தர்மபுரியில்:

துவக்கத்தில், புரட்சி நடிகர் அவர்கள் தர்மபுரியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் தர்மபுரி மாவட்டச் செயலாளர் எச். எல். முருகேசன் தலைமையிலும்--எம். சுப்பிரமணியம் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் அரூர் முத்து எம்.பி., வட்டச் செயலாளர் பெரியசாமி, க. இராசாராம் எம்.பி. ஆகியோர் பேசிய பின், புரட்சி நடிகர் கழக ஈராண்டுச் சாதனைகள் குறித்து விளக்கிப் பேசினுர்.

சேலம் நகரில் :

சேலம் நகரில் 12-ந் தேதியன்று மாலை 6-30 மணிச்கு நேரு கலையரங்கில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சேலம் நகரச் செயலாளர் பழனியப்பன் எம்.சி. தலைமையிலும் -- சேலம் மாவட்ட அவைத் தலைவர் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம் முன்னிலையிலும் இக்கூட்டம் நடைபெற்றது.

மதுரை கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சேலம் மாவட்டத் துணைச் செயலாளர் அன்புக்கரசு, மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., க. இராசாராம் எம்.பி. ஆகியோர் பேசியபின், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். சிறப்புரையாற்றினுர்.

அறிஞர் அண்ணு சிகிச்சை நிதிக்காக சேலம் மாவட்ட எம்.பி. -- எம்.எல்.ஏ.-க்கள் அளித்த ஒரு மாத ஊதியத்துடன், சிறப்புக் கூட்டக் கலையரங்கில் வசூலான தொகையையும் சேர்த்து மொத்தம் பத்தாயிரம் ரூபாயை மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன், புரட்சி நடிகரிடம் கொடுத்தார்.

இக்கூட்டத்தில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பேசியதாவது :—

"அறிஞர் அண்ணு அவர்களின் சிகிச்சை நிதிக்குத் தனிப்பட்ட ஒரு சிலரே வழங்கிவிட முடியும்; ஆனுல் அதனை, அறிஞர் அண்ணு அவர்கள் விரும்ப மாட்டார்; கழகத்திற்காகத் திரட்டப்படுகின்ற நிதியாக இருந்தாலும், அதைப் பொது மக்களிடமிருந்து -- ஏழை எளிய மக்களிடமிருந்து -- அவர்களது நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பாக அளிக்கப்படுகின்ற சிறு சிறு தொகைகளைத்தான் பெரிதாக மதிப்பார்; ஆகவேதான், பொது மக்களாகிய உங்களிடம் நிதி கேட்கிருேம்; நீங்களும் தாராளமாக வழங்குகிறீர்கள்.

"ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காகவே அறிஞர் அண்ணு அவர்கள் பாடுபட்டு வருகிருர்கள். அவரது ஆட்சிக்கு நீங்கள் என்றும் உற்ற துணையாக இருந்து ஒத்துழைப்புத் தந்து நல்லாட்சி நிலைத்திட உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

வானெலியில் இந்திச் செய்தி

பகலில் மட்டும் நிறுத்தப்பட்டது!

சென்னை, டிச. 13—
அனைத்திந்திய வானெலியின் புதுடில்லி நிலையத்திலிருந்து நாள்தோறும் பகல் 1-40 மணிக்கு ஒலிபரப்பப்படும் இந்திச் செய்தி அறிக்கையை சென்னை -- திருச்சி -- புதுச்சேரி ஆகிய நிலையங்கள் அஞ்சல் செய்வதில்லை.

10 நிமிடம் நீடிக்கும் இந்தச் செய்தி அறிக்கையை இதுவரை இந்த நிலையங்கள் ஒலிபரப்பி வந்தன; நேற்று முதல் பகலில் இந்திச் செய்தி அறிக்கை தமிழக நிலையங்கள் அஞ்சல் செய்யப்படுவதில்லை

இரவு 8-45 மணிக்கு சென்னை-2, திருச்சி, புதுவை நிலையங்கள் இந்திச் செய்தியை ஒலிபரப்புகின்றன; அதேபோல காலை 8-மணி முதல் 8-15 மணி வரையிலும் இந்திச் செய்தி அறிக்கையை இந்த நிலையங்கள் அஞ்சல் செய்கின்றன.

கவர்னருடன் மேயர்--துணை மேயர்

மாநகரப் பிரச்சினைகள் பற்றிப் பேசினர்

சென்னை, டிச. 13—
சென்னை மேயர் வேலூர் நாராயணன், துணை மேயர் கோவிந்தசாமி ஆகியோர் இன்று காலை தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்கை, அவரது மாளிகையில் சந்தித்து, மாநகரப் பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

நகரில் சேரி ஒழிப்பில் தீவிரக் கவனம் செலுத்தி வருவது குறித்து ஆளுநர் ஆவலுடன் கேட்டார்.

டில்லி மாநகராட்சி மூன்ருண்டுகளில் சேரிகளை அகற்றி, நகரை அழகுபடுத்தியதை ஆளுநர் சுட்டிக்காட்டி, அதுபோன்று தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

சென்னை மெரீனு கடற்கரையை அழகுபடுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்படி ஆளுநர் யோசனை தெரிவித்தார்.

மெரீனு கடற்கரையின் அழகைப் பாதிக்கும் வகையில் உள்ள குடிசைகளையும், மற்றவைகளையும் அப்புறப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை சென்னைமாநகராட்சி மேற்கொண்டிருப்பதை மேயர் விளக்கினுர்.

சின்னதாராபுரம் தி.மு.க. பணிமனை திறப்பு விழா

சின்னதாராபுரம் தி. மு. க. கிளையின் மணிமனையை உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி திறந்துவைப்பார்.

இவ்விழா, 16—12—68 காலை 9-30 மணிக்கு அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்; அண்ணு படத்தை ஆர். என். இராமசாமி திறந்துவைப்பார்; பரமத்தி சண்முகம் கொடியேற்றுவார்; எஸ். கந்தசாமி எம்.எல்.ஏ, பு. வே. இராமசாமி ஆகியோர் பேசுவர்.

குடும்ப நலத் திட்ட விழா

குடும்ப நலத் திட்ட இருவார விழாவையொட்டி, 16—12—68 மாலை 6-30 மணிக்கு, சென்னை—வண்ணை மீனும்பாள் நகர் காக்ரேன் பேசின் சாலை மாநகராட்சிப் பள்ளித் திடலில் மேயர் வேலூர் நாராயணன் தலைமையில், பொதுப் பணி அமைச்சர் மு. கருணுநிதி, பேராசிரியர் அன்புகணபதி, எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., பஞ்சாட்சரம் எம்.சி. ஆகியோர் பேசுவர்; கலை நிகழ்ச்சிகளும் உண்டு.

குழுக் கூட்டம்

வேலூர் வட்டம்

வேலூர் வட்ட தி.மு.க. கூட்டம் 15-12-68 பிற்பகல் 2-30 மணிக்கு வடகாத்திப்பட்டியில் நடைபெறும்; கிளைக் கழகச் செயலாளர்கள், வட்டப் பிரதிநிதிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் இரா சீனிவாசன் கேட்டுக் கொள்கிருர்.

புதுவையில் தேர்தல் பிரச்சாரம்

புதுவை, டிச. 12—
புதுவை மாநில நகராட்சித் தேர்தலில் இன்னும் இரண்டு நாட்களே பிரச்சார வாய்ப்புள்ளதால், தேர்தல் பிரச்சாரம் உச்சக் கட்டத்தை நெருங்கியுள்ளது.

தொகுதிகள் தோறும் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

கழகக் கலை நிகழ்ச்சிக் குழுவினர், மதுரை தங்கராசு—கண்ணம்மா குழுவினர், புதுவையெங்கும், கலை நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டுள்ளனர்.

புதுவை மாவட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் அவர்களும், திருவை அண்ணுமலை, நெல்லை திராவிடமணி, வழக்கறிஞர் இளம்வழுதி, மற்றும் கழகப் பேச்சாளர்களும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாயூரம் கிட்டப்பா தொகுதிச் சுற்றுப்பயணம்

மாயூரம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா, தொகுதி மக்களின் குறைகளை நேரில் கேட்டறியும்பொருட்டு, கீழ்க்காணும் தேதிகளில் --- கீழ்க்காணும் விவரப்படி பொதுமக்களைச் சந்திக்க இருக்கிருர்.

அவருடன், மாயூரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வி. கோவிந்தசாமி, சிரணித் தலைவர் ஆர். ஜோசப் எம்.சி., இரா. சிவப்பிரகாசம், மாவட்ட நலத்துறை உறுப்பினர் பி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் வருகிருர்கள்.

பொதுமக்கள் தங்கள் குறைகளை அவர்களிடம் அளிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

16—12—68 காலை 9-45 மணி முதல் மாலை 6-45 மணிவரை :—
மாப்படுகை, சோழம்பேட்டை, மகாராசபுரம், பாண்டூர், பொன்னூர், திருமங்கலம், காளி, நமசிவாயமரம், பூதங்குடி, கேசிங்கன், ஆத்தூர்.

17—12—68 காலை 9 மணிமுதல் மாலை 6-45 மணிவரை :—
முருகமங்கலம், திருச்சிற்றம்பலம், கடலங்குடி, முடிகண்டநல்லூர், கிழாய், மணல்மேடு, கடக்கம், வரதம்பட்டு, இளந்தோப்பு, பட்டவர்த்தி, கடுவங்குடி.

18—12—68 காலை 9 மணிமுதல் இரவு 7 மணிவரை :—
நீடூர, ஐவநல்லூர், கொறுக்கை, தாழஞ்சேரி, வில்லியநல்லூர், மேலாநல்லூர், சேத்தூர், தலைஞாயிறு, குறிச்சி, சித்தமல்லி.

19—12—68 காலை 9-மணிமுதல் இரவு 7-15 மணிவரை :—
அருண்மொழிதேவன், கங்கனம்புத்தூர், அருவாப்பாடி, ஆனதாண்டவபுரம், மேலமருதாந்தநல்லூர், மொழையூர், உளுத்துக்குப்பை, தருமதானபுரம், மணக்குடி, வள்ளாலகரம், திருஇந்தளூர், சித்தர்க்காடு.

20—12—68 காலை 9-மணிமுதல் மாலை 6-30 மணிவரை :—
குளச்சார், மன்னம்பந்தல், நல்லத்துக்குடி, செறுதியூர், சோடங்குடி, மாயூரம் ரூரல், பட்டமங்கலம், அகரக்கீரங்குடி, மறையூர், மூவலூர், ஆனைமேலகரம்.

ஆசிரியர் கூட்டணி சிறப்பு விழா

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி கோலியனூர் வட்டாரக் கிளையின் சிறப்பு விழா, 15—12—68 மாலை 3 மணிக்கு வளவனூர் கோவிந்த ஐயர் பள்ளியில் நடைபெறும்; தலைவர் : பி. துரைராசன்; பேசுவோர் : க. அறிவழகன் எம்.எல்.சி., எம். சண்முகம் எம்.எல்.ஏ., எம். இராமன் எம்.எல்.ஏ.; கொடியேற்றுபவர் : கே. இராமச்சந்திரன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.